டிசம்பர் 2019

விண்மீன்.காம்

# நான்காவது வார நடப்பு நிகழ்வுகள்

22 டிசம்பர் – 31 டிசம்பர்

www.winmeen.com

## நடப்பு நிகழ்வுகள்


**1.ஐக்கிய நாடுகளில் போட்டியிடவிருக்கும் 'Nine Dash Line', எந்த நீர்நிலையில் அமைந்துள்ளது?**

**A) தென்சீனக் கடல் ☑**

B) வடக்கு அட்லாண்டிக் பெருங்கடல்

C) கிழக்கு பிலிப்பைன்ஸ் கடல்

D) ஆர்டிக் பெருங்கடல்



❖ 'ஒன்பது வரி எல்லைக்கோடு' என்பது தென்சீனக்கடலில் அமைந்துள்ள ஓர் எல்லைக்கோடாகும். தென்சீனக்கடலின் பெரும்பகுதியின்மீது இறையாண்மையைக்கோருவதற்கு சீனாவால் இந்த எல்லைக் கோடு பயன்படுத்தப்படுகிறது. மலேசியா தனது உரிமைக்கோரல்களை, ஐக்கிய நாடுகள் அவையில், "பிரத்தியேக பொருளாதார மண்டல" உரிமைகள் என்ற கருத்துடன் போட்டியிடவுள்ளது.

**2.நோர்ட் ஸ்ட்ரீம்–2 என்பது எந்த இருநாடுகளுக்கிடையிலான எரிவாயு குழாய் பதிப்பு திட்டமாகும்?**

A) ரஷ்யா மற்றும் துருக்கி

B) ஜெர்மனி மற்றும் துருக்கி

**C) ரஷ்யா மற்றும் ஜெர்மனி ☑**

D) துருக்கி மற்றும் ஐக்கிய அமெரிக்க நாடுகள்




❖ 'Nord Stream–2' என்பது என்பது ரஷ்யாவுக்கும் ஜெர்மனிக்கும் இடையிலான ஓர் எரிவாயு குழாய் பதிப்பு திட்டமாகும். இத்திட்டத்தின் வளர்ச்சிக்கு உதவும் நிறுவனங்களுக்கு பொருளாதாரத்தடைகளை விதிக்கும் ஒரு சட்டத்தை ஐக்கிய அமெரிக்க நாடுகள் அரசாங்கம் சமீபத்தில் நிறைவேற்றியது. ரஷ்யா ஏற்கனவே 40 சதவீத அளவுக்கு ஐரோப்பிய ஒன்றியத்துக்கு எரிவாயு வழங்கிவரும் ஒரு மிகப்பெரிய வழங்குநராக உள்ளது. இத்திட்டம் ஐரோப்பிய ஒன்றியத்துக்கான எரிவாயு ஏற்றுமதியை அதிகரிக்கும்.

**3.மேற்காசியாவில் போர்க்குற்றங்கள் குறித்து ஆராய முற்படும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், எந்த ஒப்பந்தத்தின்மூலம் நிறுவப்பட்டது?**

A) ஜெனீவா தீர்மானம்

**B) ரோம் சட்டம் ☑**

C) வியன்னா தீர்மானம்

D) கியோட்டோ நெறிமுறை

Cour Pénale Internationale
International Criminal Court

❖ சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், நெதர்லாந்தில் உள்ள ஹேக்கில், ரோம் சட்டத்தால் நிறுவப்பட்டது. அது, காசா & மேற்குக்கரை பிராந்தியத்தில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் குறித்து ஆராய முற்படுகிறது. இருப்பினும், இஸ்ரேல் நாடு, ரோம் சட்டத்தில் கையொப்பமிடாத நாடு என்பதால், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு இஸ்ரேலில் செல்லுபடியாகாது எனக்கூறுகிறது.

**4.பாலியல் துஷ்பிரயோக வழக்குகளுக்கு பொருந்தக்கூடிய 'திருத்தந்தைக்கான ரகசியவிதி'யை ரத்து செய்துள்ள திருத்தந்தை யார்?**



**A)** திருத்தந்தை பிரான்சிஸ் ☑

B) திருத்தந்தை பெனடிக்ட் XBI

C) திருத்தந்தை பியஸ் XII

D) திருத்தந்தை பால் VI

❖ பாலியல் துஷ்பிரயோக வழக்குகளுக்கு பொருந்தக்கூடிய, 'திருத்தந்தைக்கான ரகசியவிதி – Pontifical Secrecy'யை தற்போதைய திருத்தந்தை பிரான்சிஸால் ரத்து செய்யப்பட்டுள்ளது. திருத்தந்தைக்கான ரகசியவிதியானது ரோமன் கத்தோலிக்க திருச்சபையும், திருத்தந்தை தூதரகங்களுக்கிடையேயான தகவல்தொடர்புகள் போன்ற சில விஷயங்களை ரகசியமாக வைத்திருக்க அனுமதிக்கிறது. இது, 'ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் நியதிச்சட்டத்திற்கு' உட்பட்டதாகும்.

**5.அண்மையில், எந்த நாட்டின் உச்சநீதிமன்றம், காலநிலை செயல்பாட்டில் அரசின் பொறுப்பையேற்ற முதல் உச்சநீதிமன்றமாக ஆனது?**



**A)** நெதர்லாந்து ☑

B) டென்மார்க்

C) நார்வே

D) பின்லாந்து

❖ அடுத்த ஆண்டு இறுதிக்குள் பைங்குடில் வாயு வெளியேற்றத்தை, நெதர்லாந்து அரசாங்கம், 25 சதவீத குறைக்கவேண்டும் என நெதர்லாந்தின் உச்சநீதிமன்றம் அண்மையில் தீர்ப்பளித்தது. காலநிலை மாற்றத்துக்கு எதிராக பாதுகாக்கப்படவேண்டிய அடிப்படை உரிமைகள் மாந்தர்களுக்கு உண்டு என்பதையும் இது உறுதிப்படுத்தியுள்ளது. இதன்மூலம், காலநிலை மாற்றத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் முதல் நீதிமன்றமாக நெதர்லாந்து நாட்டின் நீதிமன்றம் திகழ்கிறது.

**6.மனித செயல்பாடுகளை பிரதிபலிக்கும் திறன்படைத்த T–HR3 மனித ரோபோவை அறிமுகப்படுத்திய நிறுவனம் எது?**



A) ஃபோர்டு

B) வோக்ஸ்வாகன்

**C)** டொயோட்டா மோட்டார் கார்ப். ☑

D) ஹோண்டா

❖ டொயோட்டா மோட்டார் கார்ப்., சமீபத்தில், அதன் மனித ரோபோவான T–HR3இன் மேம்படுத்தப்பட்ட நவீன பதிப்பை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த ரோபோவை, ஹெட்செட் மற்றும் வயர் இணைப்பைப் பயன்படுத்தி தொலைவிலிருந்து கட்டுப்படுத்தலாம். அறுவைச்சிகிச்சை நிபுணரால் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டால், இந்த தொழில்நுட்பத்தை அறுவைச்சிகிச்சைக்கும் பயன்படுத்தவியலும்.

**7.அமெரிக்காவின் சட்டமான DASKA, எந்த நாட்டிற்கு எதிராக பொருளாதாரத்தடைகளை விதிக்கிறது?**

**A) ரஷ்யா ☑**

B) சீனா

C) ஈரான்

D) ஈராக்



❖ Defending American Security from Kremlin Aggression சட்டம், சமீபத்தில், நிறைவேற்றப்பட்டது. NATO மீதான உறுதிப்பாட்டை மீண்டும் நிலைநிறுத்துதல், இணைய பாதுகாப்பை மேம்படுத்துதல் மற்றும் ரஷ்ய நிறுவனங்கள் மற்றும் சட்டவிரோத மற்றும் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடும் தனிநபர்கள் மீது பொருளாதாரத்தடைகளை விதித்தல் – பல முனைகளில் ரஷ்யாவை எதிர்கொள்ளும் அமெரிக்காவின் திறனை வலுப்படுத்துவதற்காக இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

**8.எந்த நாட்டில், ஹார்பின் பனி விழா கொண்டாடப்படுகிறது?**

**A) சீனா ☑**

B) ஜப்பான்

C) பின்லாந்து

D) தென் கொரியா



❖ ஹார்பின் பனி திருவிழா என்பது சீனாவில் ஆண்டுதோறும் நடைபெறும் குளிர்காலத்திருவிழாவாகும். இதுதற்போது, உலகின் மிகப்பெரிய பனி மற்றும் பனிப்பொழிவு திருவிழாவாக உள்ளது. தொடக்கத்தில், பெரும்பாலும் சீனர்கள் மட்டுமே பங்கேற்ற இத்திருவிழா; தற்போது சர்வதேச விழாவாக மாறியுள்ளது.

**9. தெற்கு மத்திய ரயில்வே, சமீபத்தில், அதன் வினைல் விளம்பரத்தின் ஒருபகுதியாக, எந்நிறுவனத்தின் வண்ணத்தில், ஹைதராபாத்–புது தில்லி விரைவு தொடர்வண்டியை அலங்கரித்தது?**

**A) சிங்கரேணி நிலக்கரி சுரங்க லிட்., ☑**

B) மகாநதி நிலக்கரி சுரங்க லிட்.,

C) டாடா ஸ்டீல்

D) கிழக்கு நிலக்கரி புலம்

❖ தெற்கு மத்திய ரயில்வே, ஹைதராபாத், அரசு துறைகள் / பொதுத்துறை நிறுவனங்களுக்கு விளம்பரம் செய்வதற்கான தனது முதல் முயற்சியைத் தொடங்கியுள்ளது. ஹைதராபாத்–புது தில்லி தெலுங்கானா விரைவு தொடர்வண்டியை வினைல்மூலம் போர்த்துவதற்காக, அரசுக்குச் சொந்தமான நிலக்கரி உற்பத்தி நிறுவனமான சிங்கரேணி நிலக்கரி சுரங்க லிட்., உடன் அது ஒப்பந்தம் செய்திருந்தது.

**10.சமீபத்தில், சபாகர் ஒப்பந்தத்தின்கீழ் கொண்டுவரப்பட்ட துறைமுகம் எது?**

A) சென்னை

**B)** மர்மகோவா ☑

C) கொல்கத்தா

D) விசாகப்பட்டினம்



- இந்தியா, ஈரான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகள் அண்மையில் ஜவஹர்லால் நேரு துறைமுக அறக்கட்டளை, முந்த்ரா, கண்ட்லா மற்றும் கொச்சின் துறைமுகங்களுடன் கூடுதலாக மர்மகோவா மற்றும் புதிய மங்களூர் துறைமுகத்தை சபாகர் ஒப்பந்தத்தின்கீழ் கொண்டுவரமுடிவுசெய்துள்ளன.
- இது, சபாகர் ஒப்பந்தத்தின்கீழ் உருவாக்கப்பட்ட வழித்தடத்தின் ஒருபகுதியாக, இந்தியாவை, உத்திசார் ரீதியாக அமைந்துள்ள சபாகர் துறைமுகத்துடன் இணைக்கிறது.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- 43ஆவது சென்னை புத்தகக் கண்காட்சி, "கீழடி–ஈரடி" என்ற தலைப்பில், ஜன.9–21 வரை சென்னை நந்தனம் YMCA மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதில் 2 கோடி புத்தகங்கள் காட்சிக்கு வைக்கப்பட உள்ளன. தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் சங்கம் சார்பில் ஒவ்வோர் ஆண்டும் சென்னையில் புத்தகக் கண்காட்சி நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1.கலபகோஸ் (Galapagos) தேசியப்பூங்கா அமைந்துள்ள நாடு எது?**

**A) எக்குவடோர் ☑**

B) ஹோண்டுராஸ்

C) பப்புவா நியூ கினி

D) பிரேசில்



❖ 600 கேலன் டீசல் எரிபொருளை ஏற்றிச்சென்ற ஒரு கப்பல் மூழ்கியதையடுத்து, கலபகோஸ் தீவுகளில் எரிபொருள் கசிவால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பைக்குறைப்பதற்கு எக்குவடோர் அவசரநிலையை அறிவித்துள்ளது. இந்தத் தீவுகள், எக்குவடோர் பெருநிலத்திலிருந்து 1,000 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

❖ எக்குவடோர் கடற்படை மற்றும் தேசிய காவல்துறை ஆகியவை, கலபகோஸ் தேசியப்பூங்காவின் இயற்கை காப்பு ஆணையத்துடன் ஒருங்கிணைந்து அவசரநிலைக்குத் தீர்வுகாணவும் சுற்றுச்சூழல் பாதிப்பை மதிப்பிடவும் செய்தன. UNESCOஇன் உலக பாரம்பரிய தலமான கலபகோஸ் தீவுக்கூட்டம், பூமியின் மிகவும் பலவீனமான சுற்றுச்சூழல் அமைப்புகளுள் ஒன்றாக உள்ளது.

**2.மானுவல் மர்ரேரோ குரூஸ் (Manuel Marrero Cruz) – எந்த நாட்டின் பிரதமர்?**

**A) கியூபா ☑**

B) கம்போடியா

C) சிலி

D) எக்குவடோர்



❖ 43 ஆண்டு இடைவெளிக்குப் பிறகு கியூபாவுக்கு பிரதமர் நியமிக்கப்பட்டுள்ளார். கியூபாவின் பிரதமராக அந்த நாட்டு சுற்றுலாத்துறை அமைச்சர் மானுவல் மரேரோ குரூஸ் நியமிக்கப்பட்டுள்ளார். புரட்சியின் மூலம் கியூபாவின் ஆட்சியை கடந்த 1956ஆம் ஆண்டு கைப்பற்றிய பிடல் காஸ்ட்ரோ, அந்த நாட்டின் பிரதமராகப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

❖ பின்னர், அந்நாட்டை அதிபர் ஆட்சிமுறைக்கு மாற்றிய பிடல் காஸ்ட்ரோ, 1976ஆம் ஆண்டில் அதிபராகப் பொறுப்பேற்றார். அதற்குப்பிறகு, கியூபாவில், பிரதமர் பதவியே இல்லாமல் இருந்துவந்தது.


**3.இந்தியாவின் எந்தப் பிரதமரின் நினைவாக தேசிய உழவர்கள் நாள் கொண்டாடப்படுகிறது?**

A) குல்சரிலால் நந்தா

B) மொரார்ஜி தேசாய்

C) சந்திர சேகர்

**D) சரண் சிங் ☑**



- இந்தியாவின் சமூக–பொருளாதார வளர்ச்சியில் உழவர்களின் பங்கை அங்கீகரிக்கவும், ஐந்தாவது பிரதமர் சௌத்ரி சரண் சிங்கின் பிறந்தநாளைக் குறிக்கவுமாக ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் 23 அன்று தேசிய உழவர்கள் நாள் இந்தியாவில் கொண்டாடப்படுகிறது.

- இந்திய நாட்டில் உழவர்களின் நலவாழ்வுக்கு அவர் போராடியதற்காக அவர், "இந்திய விவசாயிகளின் சாம்பியன்" என குறிப்பிடப்படுகிறார். இந்நாள், 'கிசான் திவாஸ்' என பிரபலமாக அறியப்படுகிறது.

**4.எந்த நாட்டின் ஆயுதமேந்திய காவல்படைக்காக, இந்திய அரசாங்கத்தால், கீர்த்திபூர் பெண்கள் விடுதி கட்டப்பட்டது?**

**A)** நேபாளம் ☑

**B)** பூடான்

**C)** திபெத்

**D)** ஆப்கானிஸ்தான்




- காத்மாண்டுவின் கீர்த்திபூரில் உள்ள பெண்கள் விடுதியானது இந்திய அரசால் கட்டப்பட்டு, சமீபத்தில் திறக்கப்பட்டது. இதனை கீர்த்திபூரில் உள்ள நேபாள ஆயுதமேந்திய காவல்படைப்பள்ளி பயன்படுத்திக் –கொள்ளும். பள்ளியில் உள்ள மொத்த மாணாக்கரின் எண்ணிக்கையில் 21% பெண்கள் உள்ளனர். 2005ஆம் ஆண்டில் இந்தப் பள்ளி நிறுவப்பட்டது. இந்த விடுதியின் கட்டுமானத்திற்காக, இந்தியா, 40 மில்லியனுக்கும் அதிகமான நேபாளி ரூபாயை பங்களித்துள்ளது.

**5.இந்தியாவின் தேசிய கணித நாள் ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் 22 அன்று கொண்டாடப்படுகிறது. இந்நாளின்போது நினைவுகூரப்படும் நபர் யார்?**

**A)** ஆர்யபட்டா

**B)** C R ராவ்

**C)** D R கப்ரேக்கர்

**D)** சீனிவாச ராமானுஜன் ☑




- இந்தியாவின் புகழ்பெற்ற கணிதவியலாளரான சீனிவாச ராமானுஜன் அவர்களின் பிறந்தநாளைக் கொண்டாடும் விதமாக ஆண்டுதோறும் டிச.22 அன்று தேசிய கணித நாள் கொண்டாடப்படுகிறது. ராமானுஜத்தின் 125ஆவது பிறந்தநாளைச் சிறப்பிக்கும் விதமாக முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் அவர்களால், சீனிவாச ராமானுஜத்தின் பிறந்தநாள், தேசிய கணித நாளாக நிறுவப்பட்டது.

- மேலும், 2012ஆம் ஆண்டு தேசிய கணித ஆண்டாகவும் அறிவிக்கப்பட்டது. ராமானுஜன், 1887ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள ஈரோடு மாவட்டத்தில் பிறந்தார். 1918இல், ராமானுஜன், லண்டன் ராயல் சொசைட்டியின் உறுப்பினரானார் (FRS பட்டம்). 1920 ஏப்.6 அன்று அவர் காலமானார்.

**6.நடப்பாண்டில் (2019) அமைதிக்கான நோபல்பரிசை வென்ற எத்தியோப்பியாவின் பிரதமர், சமீபத்தில், ஆப்பிரிக்காவின் கொம்பில் (Horn of Africa) அமைதிக்கான அழைப்பை விடுத்திருந்தார். 'ஆப்பிரிக்காவின் கொம்பு' என்பது என்ன?**




A) தீவு

**B) தீபகற்பம் ☑**

C) பீடபூமி

D) துணைக்கண்டம்

❖ 'ஆப்பிரிக்காவின் கொம்பு' என்பது கிழக்கு ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள ஒரு தீபகற்பமாகும். இந்தப் பகுதி வடகிழக்கு ஆப்பிரிக்கா என்றும் சோமாலியத் தீபகற்பம் எனவும் குறிப்பிடப்பிடப்படுகிறது. இந்தத் தீபகற்பத்தின் கடற்கரை, அரபிக்கடல் மற்றும் ஏமன் வளைகுடாவை எல்லைகளாகக் கொண்டுள்ளது. சோமாலியா, எரித்திரியா, ஜிபூட்டி, எத்தியோப்பியா ஆகியவை இந்தப்பகுதியில் உள்ள நாடுகளாகும்.

**7.வங்கதேசத்தில் பல உயிர்களை பலிவாங்கிய கடுமையான சுவாச நோய்த்தொற்றுக்குக் காரணமான உயிரினம் எது?**

A) பாக்டீரியா

**B) வைரஸ் ☑**




C) பூஞ்சைகள்

D) நுண்ணுயிரி

❖ கடுமையான சுவாச நோய்த்தொற்றின் காரணமாக வங்கதேசத்தில் 16 பேர் உயிரிழந்துள்ளனர். தீவிர வைரஸ் தொற்றுநோயான இது, இயல்பான சுவாச செயல்பாட்டைத் தடுக்கிறது. பொதுவாக இது மூக்கு, மூச்சுக்குழாய் அல்லது நுரையீரலில் வைரஸ் தொற்றுநோயாகத் தொடங்குகிறது. நோய்த்தொற்றுக்கு சிகிச்சையளிக்கப்படாவிட்டால், அது முழு சுவாச அமைப்புக்கும் பரவி, உயிரிழப்புக்கு காரணமாகிறது.

**8.எல்சா புயல் தாக்கிய பகுதி எது?**

A) அமெரிக்கா



B) கிழக்காசியா

C) மத்திய ஆசியா

**D) மேற்கு ஐரோப்பியா ☑**

❖ எல்சா (Elsa) மற்றும் பேபியன் (Fabien) ஆகிய இரண்டு புயல்கள் ஸ்பெயினையும் போர்ச்சுகலையும் தாக்கியுள்ளன. அண்மைய வானிலை முன்கணிப்பின்படி, வானிலை இன்னும் மோசமடையக்கூடும். இந்தக் கடுமையான புயல்கள், ஐபீரிய தீபகற்பத்தில் அமைந்துள்ள பெருவாரியான பகுதிகளுக்கு தீவிர காற்று மற்றும் மழைப்பொழிவைக் கொண்டுவந்தன.

**9.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'உர்சித் – Ursid' என்றால் என்ன?**

**A)** எரிகல் பொழிவு ☑

**B)** வால் நட்சத்திரம்

**C)** விண்மீன்

**D)** செயற்கைக்கோள்



❖ உர்சித் எரிகல் பொழிவானது ஆண்டுதோறும் டிச.17ஆம் தேதி தொடங்கி டிச.25 அல்லது 26ஆம் தேதி வரை தொடர்கிறது. கதிர்விடு புள்ளிக்கு பெயர்பெற்ற இது, உர்சா மைனர் விண்மீன் கூட்டத்தில், பீட்டா உர்சே மைனாரிசுக்கு அருகில் அமைந்துள்ளது.

**10. FDA, அண்மையில், 'Ervebo' தடுப்பூசிக்கு ஒப்புதல் அளித்தது. Ervebo என்றால் என்ன?**

**A)** எபோலா தடுப்பூசி ☑

**B)** தட்டம்மை தடுப்பூசி

**C)** பெரியம்மை தடுப்பூசி

**D)** போலியோ தடுப்பூசி



❖ மெர்க் (Merck) உருவாக்கிய எபோலா தடுப்பூசியான எர்வெபோவுக்கு ஒப்புதல் அளித்துள்ள முதல் முகமையாக அமெரிக்க உணவு & மருந்து நிர்வாகம் மாறியுள்ளது. இது, எபோலா நோய்த்தொற்றுக்கு பொதுவான காரணமாக இருக்கும் ஜைர் எபோலா (Zaire Ebola) வைரஸிலிருந்து பாதுகாக்கிறது. காங்கோ குடியரசில் நீண்டகாலமாக எபோலா நோய்த்தொற்று ஏற்பட்டதற்கு, இந்த ஜைர் எபோலா வைரஸ்தான் காரணமாக இருந்தது.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

❖ தமிழ்நாட்டில், 3 மீன்பிடி துறைமுகங்கள் அமைப்பதற்கு, மத்திய அரசு, ₹450 கோடியை கடனுதவியாக வழங்குகிறது. இந்தக் கடனுக்கான வட்டியில் 3 சதவீதத்தை மத்திய அரசு மானியமாக வழங்குகிறது. எனவே குறைந்த வட்டியான ஐந்து சதவீதத்தில் இந்தக் கடன் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு, 12 ஆண்டுகளில் இந்தக் கடனை திருப்பிச் செலுத்தவேண்டும்.

---

## நடப்பு நிகழ்வுகள்

**1.நுண்புள்ளி இனங்காட்டிகள் (Identifiers) குறித்த விதிகளை அரசாங்கம் சமீபத்தில் அறிவித்தது. எந்த நோக்கத்திற்காக, 'நுண்புள்ளி (Microdot) தொழில்நுட்பம்' பயன்படுத்தப்படுகிறது?**



**A) வாகன இனங்காட்டி ☑**

B) கண்காணிப்பு

C) வழிகாட்டல்

D) மின்னணு வங்கியியல்

❖ மோட்டார் வாகனங்கள் மற்றும் அவற்றின் உதிரிபாகங்களில் நுண்புள்ளிகளை பொருத்துவதற்கான விதிகளை அரசாங்கம், சமீபத்தில், அறிவித்தது. இதன்மூலம் பாதுகாப்பை மேம்படுத்தவும், திருட்டு மற்றும் போலி உதிரிபாகங்களைத் தடுக்கவும் முடியும் எனக் கூறப்படுகிறது. வாகனங்கள் மற்றும் அவற்றின் பாகங்கள் மீது நுண்ணிய புள்ளிகளை தெளிப்பதன் மூலம் தனித்துவமான அடையாளத்தை இந்தத் தொழில்நுட்பம் வழங்குகிறது.

**2.ஷாகித் பெகெஷ்தி துறைமுகம் அமைந்துள்ள நாடு எது?**



A) துருக்கி

B) ஐக்கிய அரபு அமீரகம்

C) ஓமன்

**D) ஈரான் ☑**

❖ இந்தியா–ஈரான் கூட்டு ஆணையத்தின் 19ஆவது அமர்வு, சமீபத்தில், தெகுரானில் நடைபெற்றது. அதன்போது, சபாகரின் ஷாகித் பெகெஷ்தி துறைமுகத்தை செயல்படுத்துவதில் அடைந்த முன்னேற்றம் குறித்து இருநாடுகளும் திருப்தி தெரிவித்தன. ஷாகித் கலந்தரி துறைமுகம் மற்றும் ஷாகித் பெகெஷ்தி ஆகிய இரண்டு துறைமுகங்களை உள்ளடக்கிய சபாகர் துறைமுகமானது ஈரானின் ஒரே கடல்சார் துறைமுகமாக செயல்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

**3.சண்டிகரில் புதிதாக திறக்கப்பட்ட DNA பகுப்பாய்வு மையம், எந்த நிதியின்கீழ் நிறுவப்பட்டுள்ளது?**



A) தேசிய சிறு சேமிப்பு நிதி

B) நிறுவன நிதி

**C) நிர்பயா நிதி ☑**

D) வருங்கால வைப்பு நிதி

❖ சண்டிகரில் புதிதாக திறக்கப்பட்டDNA பகுப்பாய்வு மையம், நிர்பயா நிதியின்கீழ் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மையம் பாலியல் வன்கொடுமை மற்றும் ஆட்கொலை பிரிவு, தந்தைவழி பிரிவு, ஆள் அடையாள பிரிவு மற்றும் மைட்டோகாண்ட்ரியல் DNA பிரிவுக்கான வசதிகளை வழங்கும்.

❖ நவீன DNA விவரக்குறிப்பு கருவிகள் மற்றும் உபகரணங்களுடன் இந்த மையம் நன்கு கட்டமைக்கப்ப –ட்டுள்ளது. ஆண்டொன்றுக்கு 2000 வழக்குகளை ஆராயும் திறன் இம்மையத்திற்கு உண்டு.

**4.இஸ்தான்புல் கால்வாய் திட்டம், மர்மரா கடலை எந்தக்கடலுடன் இணைக்கிறது?**

A) செங்கடல்

**B) கருங்கடல் ☑**

C) அரபிக்கடல்

D) போஹனி கடல்




❖ இஸ்தான்புல் கால்வாய் திட்டம் (Kanal Istanbul) என்பது கருங்கடல் மற்றும் மர்மரா கடல், ஏஜியன் மற்றும் மத்திய தரைக்கடல்களை இணைக்கும், செயற்கை கடல்–மட்ட நீர்வழியை உருவாக்குவது குறித்த ஒரு திட்டமாகும். கடந்த 2009ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட இத்திட்டத்திலிருந்து, சமீபத்தில், சுற்றுச்சூழல் மற்றும் ஊழல் குற்றச்சாட்டு ஆகியவற்றின் காரணமாக இஸ்தான்புல்லின் மேயர் விலக்கப்பட்டுள்ளார்.

**5.தேசிய நுகர்வோர் நாள் (National Consumers Day) கடைப்பிடிக்கப்படும் தேதி எது?**

A) டிசம்பர் 22

B) டிசம்பர் 23

**C) டிசம்பர் 24 ☑**

D) டிசம்பர் 25




❖ நுகர்வோர் இயக்கத்தின் முக்கியத்துவத்தையும், ஒவ்வொரு நுகர்வோரும் தங்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள்பற்றி மேலும் அறிந்துகொள்ள வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தும்விதமாக ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் 24 அன்று இந்தியாவில் தேசிய நுகர்வோர் நாள் கொண்டாடப்படுகிறது.

❖ "Alternate Consumer Grievance Redressal" என்பது நடப்பாண்டில் (2019) வரும் இந்த நாளுக்கான கருப்பொருளாகும். 1986ஆம் ஆண்டு இதேநாளில், நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்டது. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டமென்பது நுகர்வோர் பிரச்சனைகள், சேவை குறைபாடு, வணிக நடை முறை, நேர்மையற்ற வணிகமுறை போன்றவற்றிற்குத் தீர்வுதரும் சட்டமாக உள்ளது.

**6.ஈரான் தனது பள்ளிகளை மூடுவதற்குக்காரணமான வெப்பத்தலைகீழாக்கம் (thermal inversion) என்ன?**

A) ஒரு வகை வெப்ப அலை

B) வறட்சி போன்ற சூழ்நிலை

C) மேலேயுள்ள குளிர்ந்த காற்றால் தரைக்கருகே இருக்கும் சூடான காற்று

**D) மேலேயுள்ள சூடான காற்றால் தரைக்கருகே இருக்கும் குளிர்ந்த காற்று ☑**



❖ ஈரானில், கடுமையான காற்று மாசுபாடு காரணமாக பள்ளிகள் அனைத்தும் ஒருவாரகாலத்திற்கு மூடப்பட்டுள்ளன. சூடான காற்றடுக்கானது தரைக்கருகேயுள்ள குளிர்ந்த காற்றடுக்கின்மீது படிவதால் வெப்பத்தலைகீழாக்கம் ஏற்படுகிறது. இதன்காரணமாக அடர்த்தியான நச்சுப்புகையில் தெஹ்ரான் சூழப்பட்டு அங்கு நிலைமை மோசமடைந்தது. சூடான காற்றானது குளிர்ந்த காற்றைக் கீழேயே வைத்திருந்து, மாசுபடுத்திகளை சிதறவிடாமல் தடுக்கிறது.

**7. 'சில்லாய் கலான்' என்பது பின்வருவனவற்றில் எதனுடன் தொடர்புடையது?**



A) காஷ்மீரில் உள்ள பனிச்சரிவு பாதிப்புமிக்க பகுதி

B) ஜம்மு – காஷ்மீரில் உள்ள சுற்றுலாத்தலம்

C) சரணாலயம்

**D) காஷ்மீரில் நிலவும் மிகக்கடுமையான குளிர்காலம் ☑**

❖ ஜம்மு – காஷ்மீரில் நாற்பது நாட்களுக்கு நிலவும் 'சில்லாய் கலான்' எனப்படும் அதிகபட்ச குளிர்காலம் தொடங்கியது. ஏரி, குளம், குட்டை, ஆறு உள்ளிட்ட நீர்நிலைகள் உறைந்துபோகும் அளவுக்கு மிகக் கடுமையான குளிர் இக்காலத்தின்போது நிலவும். இந்தச் சூழல் டிச.21 அன்று தொடங்கி சுமார் நாற்பது நாட்களுக்கு இருக்கும்.

❖ ஜன.31 அன்று முடியும் சில்லாய் கலானைத் தொடர்ந்து 20 நாட்களுக்கு 'சில்லாய் குர்த்' என்ற பருவம் நிலவுகிறது. இந்தக் காலக்கட்டத்தில் அதுவரை இருந்த கடுங்குளிர் குறையத்தொடங்கும். இது, பிப்.1 முதல் 19 வரை நீடிக்கும். இதையடுத்து, 'சில்லாய் பச்சா' என்று அழைக்கப்படும் மிதமான குளிர்காலம் தொடங்கும். இது மார்ச்.2 வரை நிலவுகிறது. இதுவே காஷ்மீர் குளிர்காலத்தின் கடைநிலையாகும்.

**8.இரத்த வங்கிகளுக்கான அணுகலை மேம்படுத்துவதற்காக, அண்மையில், குடியரசுத்தலைவரால் வெளியிடப்பட்ட செயலி எது?**



**A) Red Cross ☑**

B) Friends2Support

C) MBlood

D) LifeLine

❖ செஞ்சிலுவைச் சங்கத்தின் செயலியை, ஹைதராபாத்தில், குடியரசுத்தலைவர் வெளியிட்டார். இதை, தெலுங்கானாவின் நல்லாட்சி மையம் உருவாக்கியுள்ளது. அனைத்து மொழிகளிலும் அணுகக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இச்செயலி, இரத்த வங்கி & செஞ்சிலுவை சங்க உறுப்பினர்களை எளிதாக அணுகுவதை உறுதிசெய்கிறது.

**9. UNDPஆல் வருமானத்தின் அடிப்படையில் மிகவும் சமத்துவமற்றதாகக் கருதப்படும் ஆப்பிரிக்கப்பகுதி எது?**



A) வட ஆப்பிரிக்கா B) மேற்காப்பிரிக்கா

C) கிழக்காப்பிரிக்கா **D) தென்னாப்பிரிக்கா ☑**

❖ ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தால், சமீபத்தில் வெளியிடப்பட்ட, மனித மேம்பாட்டுக் குறியீட்டின்படி, தென்னாப்பிரிக்கா மிகவும் சமத்துவமற்ற பகுதியாக உள்ளது. தேசிய வருமானத்தில் பெரும்பாலான –வை வெறும் பத்து சதவீத சமூகத்திலிருந்து மட்டுமே பெறப்படுவதால் தென்னாப்பிரிக்கா மற்றும் நைஜீரியாவில் சமத்துவமின்மை மிகவும் அதிகமாக உள்ளதாக இந்தக்குறியீடு கூறுகிறது.

**10.தற்போது மறுவடிவமைக்கப்பட்டு வரும் அராக் அணுவுலை, எந்த நாட்டில் அமைந்துள்ளது?**

A) வட கொரியா

B) இந்தியா

C) பாகிஸ்தான்

D) ஈரான் ☑



❖ ஈரான் தனது அராக் கனநீர் அணுவுலையின் ஒருபகுதியை மறுவடிவமைப்பு செய்வதாக அண்மையில் அறிவித்தது. ஈரான், 2015ஆம் ஆண்டு அணுவாற்றல் ஒப்பந்தத்தின்படி, தெகுரானின் தென்மேற்கே அராக்கில் உள்ள அணுவுலையை மூடுவதற்கு ஒப்புக்கொண்டது. அணுவாற்றல் ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக இருக்கும் அயல்நாட்டு அரசாங்கங்கள் (இங்கிலாந்து, பிரான்ஸ், சீனா, ஜெர்மனி மற்றும் ரஷ்யா) அணுகுண்டுகளில் பயன்படுத்தப்படும் புளூட்டோனியத்தை உற்பத்திசெய்வதற்கு இந்த அணு உலையை பயன்படுத்தலாம் என எண்ணுகின்றன.

# நடப்பு நிகழ்வுகள்

**1. "தேசிய நல்லாட்சி நாள்" அனுசரிக்கப்படும் தேதி எது?**




A) டிசம்பர் 22

B) டிசம்பர் 23

C) டிசம்பர் 24

**D) டிசம்பர் 25 ☑**

❖ ஒவ்வோர் ஆண்டும் டிச.25 அன்று "நல்லாட்சி நாள்" அனுசரிக்கப்படுகிறது. இந்தியாவின் முன்னாள் பிரதமரான அடல் பிகாரி வாஜ்பாயை கௌரவிக்கும் பொருட்டு, கடந்த 2014ஆம் ஆண்டில் இந்தச் சிறப்பு நாள் உருவாக்கப்பட்டது. அரசாங்கத்தின் பொறுப்பு மற்றும் நிர்வாகம் குறித்து குடிமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்நாளின் நோக்கமாகும். இந்நிகழ்வைக் குறிக்கும் வகையில் நாடு முழுவதும் பல்வேறு நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன.

**2.ரோத்தங் கணவாய்க்கு கீழே அமைக்கப்பட்டுள்ள இராணுவ முக்கியத்துவம்வாய்ந்த சுரங்கப்பாதைக்கு கீழ்காணும் நபர்களுள் எவரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது?**



A) இந்திரா காந்தி

B) வல்லபாய் படேல்

C) மொரார்ஜி தேசாய்

**D) அடல் பிகாரி வாஜ்பாய் ☑**

❖ முன்னாள் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாயின் பங்களிப்புகளுக்காக, அவரை கௌரவப்படுத்தும் விதமாக, ரோத்தங் கணவாய்க்குக்கீழ் அமைக்கப்பட்டுள்ள இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த சுரங்கப்பாதைக்கு அவரது பிறந்தநாளான டிச.25 அன்று அவரதுபெயர் சூட்டப்பட்டது. காலஞ்சென்ற அடல் பிகாரி வாஜ்பாயி பிரதம அமைச்சராக இருந்தபோது, ரோத்தங் கணவாய்க்குக்கீழே, இராணுவ முக்கியத்துவம்வாய்ந்த சுரங்கப்பாதை அமைப்பது என்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முடிவு எடுக்கப்பட்டது.

❖ 8.8 கி.மீ., நீளமுள்ள உலகின் மிகநீளமான இந்தச் சுரங்கப்பாதை, கடல் மட்டத்திலிருந்து 3000 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. இந்தச் சுரங்கப்பாதை, மணாலியிலிருந்து லே வரையிலான தூரத்தை 46 கி.மீ., அளவுக்கு குறைக்கிறது.

**3.அண்மைச் செய்திகளில் குறிப்பிடப்படும் மதன் மோகன் மாலவியா என்பது யார்?**



**A) விடுதலைப்போராட்ட வீரர் ☑**

B) அமைதிக்கான நோபல் பரிசு வென்றவர்

C) வீரதீரச்செயல்களுக்கான பதக்கம் பெற்றவர்

D) புகழ்பெற்ற அறிவியலாளர்

❖ விடுதலைப் போராட்ட வீரரான மதன் மோகன் மாலவியா, 1861 டிச.25 அன்று பிரயாகராஜில் பிறந்தார். இந்திய விடுதலைப் போராட்டத்தில் குறிப்பிடத்தக்க பங்கைக்கொண்டிருந்த அவர், பனாரஸ் ஹிந்து பல்கலைக்கழகத்தின் நிறுவனராவார். இந்திய ஒப்பந்தக் கூலித்தொழிலாளர் முறையை, முடிவுக்குக் கொண்டுவருவதில் அவர்வகித்த பங்கிற்காக அவர் பெரிதும் பேசப்பட்டார். 1946ஆம் ஆண்டில் இறந்த அவருக்கு, 2014ஆம் ஆண்டில், 'இந்திய மாமணி' விருது வழங்கப்பட்டது.

**4.அண்மையில், மத்தியபிரதேச அரசால் தொடங்கப்பட்ட, 'Sire Directory' என்றால் என்ன?**

**A) கால்நடைகளின் பொருத்தப் பதிவேடு ☑**

B) நில உரிமை குறித்த பதிவேடு

C) விவசாயிகளின் வலைத்தளம்

D) வீட்டு உரிமையாளர் பதிவேடு



❖ பதினாறு வெவ்வேறு இனங்களைச்சார்ந்த இருநூறு காளைகள்பற்றிய விவரங்கள்கொண்ட, 'Sire Directory' என அழைக்கப்படும் கால்நடைகளின் "Matrimonial Record – பொருத்தப்பதிவேட்டை" மத்திய பிரதேச மாநிலத்தின் கால்நடை பராமரிப்புத்துறை தொகுத்துள்ளது. இதன்மூலம், விவசாயிகள் தங்கள் பசுவுக்கு சரியான "இணை"யை தேர்வுசெய்ய முடியும்.

❖ மேலும், 'Pedigree Details 2019–20'இன்கீழ் வலைத்தளத்திலும் இந்தத் தகவல்கள் கிடைக்கின்றன. பொதுத்தகவல், செயல்திறன் பண்புகள் மற்றும் மரபணுக் கோளாறுகளுக்கான சோதனை ஆகிய 3 குழுக்களின்கீழ் விவரங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**5.இராணுவத்தளத்திலும் கிராமத்திலும் நடந்த ஒரு பயங்கரவாதத்தாக்குதலின் காரணமாக, சமீபத்தில், புர்கினா பாசோவில் பல பொதுமக்கள் கொல்லப்பட்டனர். புர்கினா பாசோ எங்கு அமைந்துள்ளது?**

A) வட ஆப்பிரிக்கா

B) லத்தீன் அமெரிக்கா

C) மேற்கு ஆசியா

**D) மேற்கு ஆப்பிரிக்கா ☑**



❖ புர்கினா பாசோ என்பது மேற்கு ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள நிலத்தால் சூழப்பட்ட ஒரு நாடாகும். இச் சம்பவத்தில் பல பொதுமக்கள், வீரர்கள் மற்றும் 80 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். இச் சம்பவத்தில் மரணித்த பொதுமக்களுள் பெரும்பாலானோர் பெண்களாவர். பெரும்பாலும் இஸ்லாமியர்கள் வாழும் நாடான புர்கினா பாசோ, ஒரு காலத்தில், தற்போதைய நிலையை ஒப்பிடும்போது அமைதியாகவே இருந்தது. கடந்த 2015 முதல், கடுமையான அமைதியின்மையின் சூழலில் இந்நாடு சிக்குண்டுள்ளது.

**6.பான்போன் (Phanfone) சூறாவளி தாக்கிய நாடு எது?**

A) ஜப்பான்

B) சீனா

C) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

**D) பிலிப்பைன்ஸ் ☑**



❖ ஆசியாவின் மிகப்பெரிய கத்தோலிக்க தேசத்தின் கிறித்துமஸ் விடுமுறைக்கு இடையூறு விளைவிக்கும் விதமாக, பான்போன் சூறாவளி, டிச.25 அன்று, மத்திய பிலிப்பைன்சைத் தாக்கியது. பலவீனமானதாக இருந்தாலும், நாட்டின் மிகமோசமான சூறாவளியாக கருதப்படும் 2013ஆம் ஆண்டில் அந்நாட்டைத் தாக்கிய ஹையான் சூறாவளி போன்றே இதுவும் பலத்த சேதத்தை ஏற்படுத்தியுள்ளது.

**7.பின்வருவனவற்றுள் தேசிய வீதியோர தின்பண்டங்கள் விழாவை ஏற்பாடு செய்தது எது?**

A) உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு

B) வேளாண் துறை

C) உணவு மற்றும் பொது விநியோகத் துறை

**D) NASVI ☑**

❖ அண்மையில், இந்திய வீதியோர தின்பண்ட விற்பனையாளர்களின் தேசிய சங்கமும் (NASVI) இந்திய உணவுப்பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையமும் இணைந்து தேசிய வீதியோர தின்பண்டங்கள் திருவிழாவை ஏற்பாடுசெய்தன. வீதியோர தின்பண்ட விற்பனையாளர்களை பிரதான தளத்திற்குக் கொண்டுவருவதை நோக்கமாகக்கொண்டு இது, கடந்த 2009ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. "Healthier Diets" என்பது நடப்பாண்டில் (2019) நடைபெறும் இந்நிகழ்வுக்கான கருப்பொருளாகும்.

**8.உடல்நலம் மற்றும் மாசு குறித்த உலகளாவிய கூட்டணியால் வெளியிடடப்பட்ட அறிக்கையின்படி, மாசு காரணமாக அதிக இறப்புகளைச் சந்தித்த நாடு எது?**

A) சீனா

**B) இந்தியா ☑**

C) இந்தோனேஷியா

D) நைஜீரியா



❖ உடல்நலம் மற்றும் மாசு குறித்த உலகளாவிய கூட்டணி வெளியிட்டுள்ள, "2019 மாசு மற்றும் உடல்நல அளவீடுகள்: சர்வதேசம், பிராந்தியம் மற்றும் நாடுகளின் பகுப்பாய்வு" என்ற புதிய அறிக்கையின்படி, இந்தியா, கடந்த 2017ஆம் ஆண்டில், மாசு காரணமாக அதிக எண்ணிக்கையிலான இறப்புகளைச் சந்தித்துள்ளது. இந்தப் பட்டியலில், இந்தியாவைத் தொடர்ந்து சீனாவும் நைஜீரியாவும் உள்ளன. அதிக மக்கள்தொகைகொண்ட நாடுகளின் பட்டியலில் மூன்றாவது இடத்திலிருக்கும் அமெரிக்கா, இந்தப் பட்டியலின் ஏழாவது இடத்தைப் பிடித்துள்ளது.

**9.சமீபத்தில், சீன வழிகாட்டிப்பலகைகள் நிறுவப்பட்ட, இந்திய தொல்லியல் துறையால் பாதுகாக்கப்படும் தளமான சௌகந்தி தூபி அமைந்துள்ள இடம் எது?**

**A) உத்தரபிரதேசம் ☑**

B) மத்தியபிரதேசம்

C) பீகார்

D) லடாக்



- சௌகந்தி தூபி, உத்தரபிரதேசத்தில் உள்ள சாரநாத்தில் அமைந்துள்ளது. இது, இந்திய தொல்லியல் துறையால் அறிவிக்கப்பட்ட தேசிய முக்கியத்துவம்வாய்ந்த ஒரு நினைவுச்சின்னமாகும். 1 லட்சத்துக்கும் மேற்பட்ட சீன சுற்றுலாப்பயணிகள் இந்தத் தலத்தைப் பார்வையிட வருவதால், இந்திய தொல்லியல் துறை, அண்மையில், இந்தத் தூபியுள்ள இடத்தில் சீன மொழியில் வழிகாட்டிப் பலகைகளை நிறுவியது.

**10.சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட, நீண்டதூரம் பயணிக்கும் CNG பேருந்துத் திட்டத்தை செயல்படுத்திய இயற்கை எரிவாயு விநியோக நிறுவனம் எது?**



**A) இந்திரபிரஸ்தா கேஸ் லிட்., ☑**

B) எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகம்

C) ரிலையன்ஸ் பெட்ரோலியம் லிட்.,

D) இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிட்.,

- அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயுவால் இயக்கப்படும் இந்தியாவின் முதல் நீண்டதூரம் பயணிக்கும் பேருந்து, தில்லியில் அறிமுகப்படுத்தப்பட்டது. இதால் 1,000 கி.மீ., தூரத்திற்கு பயணிக்க முடியும். இந்த அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு (CNG) பேருந்துத் திட்டத்தை, இந்தியாவின் மிகப்பெரிய CNG விநியோகஸ்தர்களுள் ஒன்றான இந்திரபிரஸ்தா கேஸ் லிமிடெட் செயல்படுத்தியுள்ளது.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- நாட்டிலேயே பல்வேறு துறைகளின் செயல்பாடு அடிப்படையில் நிர்வாகத்திறனில் தமிழ்நாடு 5.62 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்துள்ளதாக தேசிய நல்லாட்சி நாளையொட்டி மத்திய நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சகம் வெளியிட்ட புள்ளிவிவரப்பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
    - குடிமக்கள் பாதுகாப்பு, சட்டம்–ஒழுங்கு, நீதி, உட்கட்டமைப்பு துறைகளில் தமிழ்நாடு முதலிடம் பிடித்துள்ளது. பொதுசுகாதாரத்தில் இரண்டாவது இடத்தையும், சுற்றுச்சூழலில் மூன்றாவது இடத்தையும், வேளாண்மையில் ஒன்பதாவது இடத்தையும், வணிகத்தில் 14ஆவது இடத்திலும், சமூகநலனில் 7ஆவது இடத்திலும் தமிழ்நாடு உள்ளது.
- கடந்த மூன்றாண்டுகளில் மாநில நெடுஞ்சாலைகளில் நிகழ்ந்த விபத்துகளில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.

---

## நடப்பு நிகழ்வுகள்

### 1. 2020ஆம் ஆண்டை, 'சுசாஷன் சங்கல்ப் வர்ஷ்' என அனுசரிக்கப்படவுள்ள மாநிலம் எது?

**A) ஹரியானா ☑**

B) மத்தியபிரதேசம்

C) மகாராஷ்டிரா

D) கர்நாடகம்

❖ அடுத்துவரும் 2020ஆம் ஆண்டை "நல்லாட்சி ஆண்டு" என ஹரியானா மாநிலம் அனுசரிக்கவுள்ளது. சீர்திருத்தங்கள் குறித்த பரிந்துரைகளை, அம்மாநில அரசு பொதுமக்களிடமிருந்து கோரியிருந்தது. இந்த அறிவிப்பு, தேசிய நல்லாட்சி நாளின் சிறப்புநிகழ்வின்போது அறிவிக்கப்பட்டது. அரசாங்க ஊழியர்களை மக்களின் நலனுக்காக பணியாற்ற ஊக்குவிக்கும் நோக்கில் பல்வேறு நடவடிக்கைகள் ஹரியானா மாநிலத்தில் எடுக்கப்பட்டுள்ளன.

### 2. எந்த மதத்தைப் பின்பற்றுபவர்கள், "Hynniew Trep" என அழைக்கப்படுகிறார்கள்?

A) ஷின்டோ

B) தாவோயியம்

**C) செங் காசி ☑**

D) கன்பூசியனியம்



❖ 1899 நவ.23 அன்று மேகாலயாவில், 'செங் காசி' நிறுவப்பட்டது. 'செங்' என்ற சொல்லுக்கு தொடக்கம் அல்லது நிறுவுதல் எனப்பொருள், 'காசிஸ்' என்பது அப்பகுதியில் வாழும் பழங்குடியின மக்களைக் குறிக்கிறது. இம்மதத்தைப்பின்பற்றுபவர்கள், "Hynniew Trep" (7 குடிசைகள்) என அழைக்கப்படுகிறார்கள். இந்த மதம் நிறுவப்பட்டதை நினைவுகூரும்வகையில், ஒவ்வோர் ஆண்டும், 'லிம்பங்' என்னும் திருவிழா அங்கு கொண்டாடப்படுகிறது.

### 3. பெண்கள் தன்மேம்பாட்டை ஊக்குவிக்கும் நோக்கில், 'இரவு நடை'யை நடத்தவுள்ள அரசாங்கம் எது?

A) தமிழ்நாடு

B) ஆந்திரபிரதேசம்

C) கர்நாடகம்

**D) கேரளம் ☑**



❖ கேரள மாநில பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறையானது பெண்களுக்கான ஓர் 'இரவு நடைபயணத்தை' நடத்தவுள்ளது. இது, பெண்கள் தன்மேம்பாட்டை நோக்கி நகர்வதற்கும், பெண்களுக்கு எதிரான அதிகரித்துவரும் வன்முறைகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் அரசாங்கத்தால் எடுக்கப்படும் முயற்சியின் ஒருபகுதியாகும். இந்நிகழ்வு, காலை 11 மணி முதல் அதிகாலை 1 மணி வரை, மாநிலம் முழுவதும் 100 இடங்களில் நடத்தப்படவுள்ளது.

**4.எந்த மாநிலத்தில், மூன்றாம் பாலினத்தவருக்கான இந்தியாவின் முதல் பல்கலை, திறக்கப்படவுள்ளது?**

**A) உத்தரபிரதேசம் ☑**

B) கேரளம்

C) குஜராத்

D) ஆந்திரபிரதேசம்

❖ மூன்றாம் பாலினத்தவருக்கான இந்தியாவின் முதல் பல்கலைக்கழகம் உத்தரபிரதேச மாநிலத்தின் குசிநகர் மாவட்டத்திலுள்ள பாசில்நகர் தொகுதியில் நிறுவப்படவுள்ளது. இதை அகில பாரதீய கின்னார் சிக்ஷா சேவா அறக்கட்டளை கட்டிவருகிறது. இந்தப்பல்கலைக்கழகம், ஒன்றாம் வகுப்பு முதல் முதுகலை மற்றும் முனைவர் பட்டம் வரையிலான கல்வியை வழங்கும்.

**5.இளம்பிள்ளைவாத நோயால் பாதிக்கப்பட்ட உலகின் மூன்று நாடுகளுள் ஒன்றான பாகிஸ்தான், இந்தியாவிலிருந்து இளம்பிள்ளைவாத நோய் அடையாள மையை இறக்குமதி செய்ய திட்டமிட்டுள்ளது. மற்ற இரண்டு நாடுகள் யாவை?**

A) ஆப்கானிஸ்தான் மற்றும் மங்கோலியா

B) நைஜீரியா மற்றும் தென்னாப்பிரிக்கா

**C) ஆப்கானிஸ்தான் மற்றும் நைஜீரியா ☑**

D) நைஜீரியா மற்றும் கென்யா



❖ 370ஆவது பிரிவை இரத்துசெய்ததற்கு பதிலளிக்கும் வகையில், பாகிஸ்தான், இந்தியாவிலிருந்து இளம்பிள்ளைவாத நோய் அடையாள மையை இறக்குமதி செய்வதை நிறுத்தியது. தற்போது, உலகின் மூன்று நாடுகளில் (பாகிஸ்தான், நைஜீரியா மற்றும் ஆப்கானிஸ்தான்) மட்டுமே இளம்பிள்ளைவாத நோய் இன்னும் பரவலாக உள்ளது.

❖ இளம்பிள்ளைவாத நோய்க்கான சொட்டுமருந்து கொடுக்கப்பட்ட பின்னர், குழந்தைகளின் விரலில் வைக்கப்படும் 'அடையாள மை'யை இறக்குமதிசெய்ய, அண்மையில், பாகிஸ்தானின் அமைச்சரவை முடிவுசெய்தது.

**6.வெட்டுக்கிளி நிலைமைகுறித்த பொதுவான முன்னறிவிப்பை வழங்குகிற அமைப்பு எது?**

**A) FAO ☑**

B) WWF

C) IFAD

D) WFP



❖ உணவு மற்றும் வேளாண்மை அமைப்பானது வெட்டுக்கிளி நிலைகுறித்த சரியான தகவலை உலக சமூகத்திற்கு அளிக்கிறது மற்றும் வெட்டுக்கிளி படையெடுப்பால் ஆபத்திலிருக்கும் உலக நாடுகளுக்கு எச்சரிக்கை மற்றும் முன்னறிவிப்புகளையும் அது வழங்குகிறது.

❖ தற்போது, குஜராத்தின் வடபகுதிகள், வெட்டுக்கிளிகளால் படையெடுக்கப்பட்டு அங்குள்ள பயிர்களுக்கு கணிசமான சேதத்தை ஏற்படுத்தின.

**7.பின்வருவனவற்றுள் எது உலகின் வல்லூறு தலைநகரம் என்று அழைக்கப்படுகிறது?**

A) சைபீரியா

**B) நாகாலாந்து ☑**

C) மேகாலயா

D) சீனா



❖ அமுர் வல்லூறு (Amur Falcon) என்பது வல்லூறு குடும்பத்தைச்சேர்ந்த சிறிய கொன்றுண்ணிப்பறவை ஆகும். இது தென்கிழக்குச்சைபீரியா மற்றும் வடக்குச்சீனாவில் இனப்பெருக்கம் செய்கின்றன. பின்னர், பெருங்கூட்டமாக இந்திய மற்றும் அரபிக்கடலைத்தாண்டி தெற்கு ஆப்பிரிக்காவில் குளிர்காலத்தைக் கழிக்கின்றன.

❖ ஆண்டுதோறும் இப்பறவைகள் இடம்பெயரும் காலத்தில், நாகாலாந்திலுள்ள டோயங் ஏரியில் தங்கிச் செல்கின்றன. எனவே, நாகாலாந்து, 'உலகின் வல்லூறு தலைநகரம்' என அழைக்கப்படுகிறது


**8.பின்வருவனவற்றுள் இந்தியாவில் காணப்படும் ஒரே வாலில்லாக் குரங்கினம் எது?**

A) கொரில்லா

B) சிம்பன்ஸி

**C) ஹூலாக் கிப்பன் ☑**

D) மாண்ட்ரில்



❖ ஹூலாக் கிப்பன் (Hoolock Gibbon), இந்தியாவில் காணப்படும் ஒரே வாலில்லாக் குரங்கினமாகும். இது, கிழக்கு வங்கதேசம், வடகிழக்கு இந்தியா மற்றும் தென்மேற்கு சீனாவை பூர்வீகமாகக்கொண்டுள்ளது. இது, மேற்கத்திய ஹூலாக் கிப்பன் & கிழக்கத்திய ஹூலாக் கிப்பன் என வகைப்படுத்தப்பட்டுள்ளது. இவ்விரண்டு இனங்களும், இந்திய வனவுயிரி பாதுகாப்புச்சட்டம், 1972இன்கீழ் பட்டியலிடப்பட்டுள்ளன.

**9.ஆயிரக்கணக்கான செயற்கைக்கோள்களை விண்வெளியில் ஏவவுள்ள குய்ப்பர் திட்டத்தை (Project Kuiper) உருவாக்கிவரும் அமெரிக்க நிறுவனம் எது?**

A) SpaceX

B) NASA

**C) Amazon ☑**

D) Blue Origin




❖ அமேசான் நிறுவனம், குய்ப்பர் திட்டத்தின் ஒருபகுதியாக மூவாயிரத்துக்கும் மேற்பட்ட செயற்கைக் கோள்களை விண்வெளியில் ஏவவுள்ளது.

❖ விண்ணில் மிகப்பெரிய செயற்கைக்கோள் தொகுதியை உருவாக்கும் இது, மலிவுவிலை இணைய சேவையை மக்களுக்கு வழங்கும். இச்செயற்கைக்கோள்கள் அனைத்தும் தாழ்புவி சுற்றுப்பாதையில் இருந்து இயக்கப்படவுள்ளன.

**10.அண்மையில், 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆழிப்பேரலையின் பதினைந்தாம் ஆண்டு நினைவை தமிழ்நாடு அரசு அனுசரித்தது. இந்த ஆழிப்பேரலை எங்கிருந்து தோன்றியது?**

A) ஜாவா தீவு

**B) சுமத்ரா தீவு ☑**

C) பாலி தீவு

D) சுலாவெசி தீவு



❖ 2004ஆம் ஆண்டு இந்தியப்பெருங்கடல் பகுதியில் மிகப்பெரிய ஆழிப்பேரலை (tsunami) ஏற்பட்டது. அண்மையில், இதன் 15ஆம் ஆண்டு நினைவை தமிழ்நாடு அரசு அனுசரித்தது. இந்தோனேசியாவின் சுமத்ரா தீவுக்கருகே இந்த ஆழிப்பேரலை தோன்றியது.

❖ கடல்நீருக்கடியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் இந்த ஆழிப்பேரலை மேலும் வலுப்பெற்று, இந்தியாவின் கிழக்குக் கடற்கரையோரத்தை அடைந்து பெருத்த பொருட்சேதம் & உயிர்சேதத்தை ஏற்படுத்தியது. 'சுமத்ரா அந்தமான் நிலநடுக்கம்' என்றும் இந்த ஆழிப்பேரலை அழைக்கப்படுகிறது.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

❖ கேரள மாநில அரசின் மிகவுயரிய விருதான 'ஹரிவராசனம் விருது' 'இசைஞானி' இளையராஜாவுக்கு வழங்கப்படுகிறது. 2012ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இவ்விருது, இசையுலக மேதைகளை கௌரவிக்கும் விதமாக ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு (2018) பாடகி பி சுசீலாவிற்கு இந்த விருது வழங்கப்பட்டது.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1.அண்மையில் ஓய்வுபெற்ற எந்தப் போர்விமானம், 'பகதூர்' என்றும் அழைக்கப்படுகிறது?**

A) MiG 27 ☑

B) தேஜஸ்

C) மிராஜ் 2000

D) கல்ப்ஸ்ட்ரீம்



❖ இந்திய விமானப்படையிலிருந்து, 'MiG-27' இரக போர்விமானம், அண்மையில் ஓய்வுபெற்றது. சோவியத் யூனியனால் உருவாக்கப்பட்டு, இந்தியாவில் ஹிந்துஸ்தான் ஏரோனாடிக்ஸ் நிறுவனத்தால் (HAL) தயாரிக்கப்பட்ட இந்தப் போர்விமானம், 'பகதூர்' என்றும் அழைக்கப்படுகிறது. பாகிஸ்தானுடன் கடந்த 1999ஆம் ஆண்டு நடைபெற்ற கார்கில் போரின்போது, இந்தியாவின் வெற்றிக்கு இந்தப் போர் விமானங்கள் மிகமுக்கியப் பங்களித்தன.


**2.உர்சுலா புயல் என்ற பெயரிலும் அழைக்கப்படுகிற வெப்பமண்டலப்புயல் எது?**

A) கம்முரி புயல்

B) பான்போன் புயல் ☑

C) நக்ரி புயல்

D) போலோய் புயல்



❖ பான்போன் (Phanfone) புயலானது பிலிப்பைன்ஸ் மக்களால் 'உர்சுலா புயல்' என அழைக்கப்படுகிறது. பசிபிக் சூறாவளிப் பருவத்தின் ஒருபகுதியான இந்த வெப்பமண்டலப்புயல் தாக்கியதன் காரணமாக பிலிப்பைன்சில் பலர் உயிரிழந்துள்ளனர் மற்றும் ஆயிரக்கணக்கானோர் தங்கள் வீடுகளிலிருந்து வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தஞ்சம்புகுந்துள்ளனர்.

**3. 2020ஆம் ஆண்டுக்கான ஷெரி சம்ரிதி உத்சவத்திற்காக மாநிலங்கள் & யூனியன் பிரதேசங்களுடன் நடுவணரசு ஆலோசித்துவருகிறது. இது, எந்த அரசாங்க முன்னெடுப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த பயன்படுகிறது?**

A) DAY-NULM ☑

B) PMKVY

C) PM KISAN

D) தேசிய கிராமப்புற வாழ்வாதார திட்டம்




❖ DAY-NULM (தீனதயாள் அந்தியோதயா திட்டம் – தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டம்) பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஷெரி சம்ரிதி உத்சவத்தை அரசு ஏற்பாடுசெய்துள்ளது. சுய உதவிக்குழுக்கள் போன்ற குழுக்களை அவற்றின் வளர்ச்சிக்கான பல்வேறு அரசாங்க திட்டங்களுடன் இணைப்பதற்கு இந்நிகழ்வு உதவுகிறது.

**4.வயா வந்தனா திட்டத்திற்கு, ஆதார் இணைப்பதை, அண்மையில் அரசாங்கம் கட்டாயமாக்கியது. இந்த வயா வந்தனா திட்டத்தின்கீழ் பயன்பெறுபவர்கள் யார்?**

A) காலஞ்சென்ற ஆயுதப்படை வீரர்களின் மனைவிகள்

**B) முதியோர்கள் ☑**

C) மாற்றுத்திறனாளிகள்

D) ஆதரவற்ற கைம்பெண்கள்




❖ பிரதம அமைச்சர் வயா வந்தனா திட்டம் என்பது முதியோர்களுக்கான ஓர் ஓய்வூதியத்திட்டமாகும். இது 60 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையை மூத்த குடிமக்களை உள்ளடக்கியதாகும். இத்திட்டத்தின் கீழ், பயனாளிகள், அடையாள ஆவணமாக ஆதார் அட்டையை இணைப்பதை அரசாங்கம் சமீபத்தில் கட்டாயமாக்கியது.

**5.நிதியுதவி பெறுவதற்கு முன்பு தனது சொத்துப்பட்டியலை அறிவிக்க பன்னாட்டு நாணய நிதியம் (IMF) கேட்டபோது, உலகின் மிகநீண்டகாலம் பணியாற்றிய அதிபராக இருந்தவர் யார்?**

**A) தியோடோரோ பசோகோ ☑**

B) ராபர்ட் முகாபே

C) ஹுன் சென்

D) ஹசனல் போல்கியா



❖ எக்குவடோரியல் கினியாவின் அதிபரான தியோடோரோ ஒபியாங் குயெமா பசோகோ, உலகின் மிக நீண்டகாலம் பணியாற்றிய அதிபராக உள்ளார். 1979ஆம் ஆண்டில் ஆட்சிக்குவந்த அவர், நாட்டின் பொருளாதாரம் கிட்டத்தட்ட மூன்றில் ஒருபங்காக சுருங்கிவிட்டதால், நிதியுதவி பெறுவதற்காக சர்வதேச நாணய நிதியத்திடம் கோரியிருந்தார். இதற்காக, அவரது சொத்து விவரங்கள் பற்றிய தகவல்களை வழங்குமாறு சர்வதேச நாணய நிதியம் தியோடோரோவிடம் கோரியிருந்தது.

**6.மக்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்ப அனுமதி மறுத்ததற்காக, ஐக்கிய பேரரசை "மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள்" புரிந்ததாக மொரீஷியஸ் குற்றஞ்சாட்டியுள்ளது. எந்தத் தீவைக் குறிப்பிட்டு இந்தக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது?**

A) பூகன்வில்லே

B) இலங்கை

**C) சாகோஸ் ☑**

D) கிரிபட்டி



❖ ஐக்கிய பேரரசு மற்றும் மொரீஷியசுக்கு இடையே சர்ச்சைக்குரிய இடமாக சாகோஸ் தீவுகள் உள்ளன. இந்தத்தீவுகளை பூர்வீகர்களிடம் ஒப்படைக்குமாறு ஐக்கிய நாடுகள் அவை அழைப்புவிடுத்த போதிலும், ஐக்கிய பேரரசு அதை செய்ய மறுத்துவிட்டது. இதற்கு பதிலளிக்கும் வகையில், "மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களை" ஐக்கிய பேரரசு செய்ததாக மொரிஷிய அரசாங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

**7.சமீபத்தில் எந்தப் பிராந்தியத்தில் உள்ள தனது வணிகக்கப்பல்களைப் பாதுகாப்பதற்காக, ஜப்பான் ஓர் அரிய கடல்தாண்டிய திட்டத்தை அறிவித்துள்ளது?**

A) ஹார்முஸ் நீரிணை

**B) ஓமன் வளைகுடா ☑**

C) பசிபிக் பெருங்கடல்

D) தென்சீனக்கடல்




❖ ஓமன் வளைகுடா, வட அரபிக்கடல் மற்றும் ஏதன் வளைகுடாவில் ஓர் அரிய கடல்தாண்டிய திட்டத்தை ஜப்பானிய அரசாங்கம் அறிவித்துள்ளது. பிராந்தியத்தில், திருட்டுபற்றிய தகவல்களைச் சேகரிப்பதும், ஜப்பானிய கடல்சார் தற்காப்புப் படையை ஈடுபடுத்துவதுமே இந்த, "விசாரணை மற்றும் ஆராய்ச்சி"யின் நோக்கமாகும்.

**8.அண்மையில், லோசர் விழாவைக் கொண்டாடிய மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?**

A) தெலுங்கானா

B) மேகாலயா

C) புதுச்சேரி

**D) லடாக் ☑**



❖ லோசர் என்பது இமயமலை மாநிலங்களில் கொண்டாடப்படும் புத்தாண்டு நாள் கொண்டாட்டமாகும். யூனியன் பிரதேசமாக அறிவிக்கப்பட்ட பின்னர், லடாக், முதன்முறையாக லோசர் விழாவைக் கொண் –டாடியுள்ளது குறிப்பிடத்தக்கது. இது, திபெத்திய பௌத்த மரபுகளை அடிப்படையாகக்கொண்ட 15 நாட்கள் கொண்டாட்டமாகும். இது பூடான், நேபாளம் போன்ற நாடுகளிலும் கொண்டாடப்படுகிறது.

**9.அண்மையில் சுகாதார அமைச்சகத்தால் முன்னிலைப்படுத்தப்பட்ட சிரோதரா, எந்தச் சிகிச்சையுடன் மிகவும் தொடர்புடையது?**

**A) ஆயுர்வேதம் ☑**

B) ரிக்பா

C) யுனானி

D) பாரம்பரிய சீன மருத்துவம்



❖ சிரோதரா என்பது ஆயுர்வேத மருத்துவமுறையில் உள்ள ஒரு சிகிச்சையாகும். 'சிரோதரா' என்ற சொல் தலை (சிரோ) மற்றும் ஓட்டம் (தரா) என்னும் பொருள்படும் சமற்கிருத சொற்களிலிருந்து பெறப்பட்டது.

❖ இந்தச் சிகிச்சையின்போது எண்ணெய், இளநீர், பால், நீர், மோர் போன்ற இயற்கையான திரவங்கள் நெற்றியின்மீது ஊற்றப்படும்.

**10.அண்மையில், நிலநடுக்கம் ஏற்பட்ட புஷேர் அணுமின் நிலையம், எந்த நாட்டில் அமைந்துள்ளது?**

A) ஈரான் ☑

B) ஈராக்

C) சவூதி அரேபியா

D) குவைத்



❖ ஈரானில் உள்ள புஷேர் அணுவுலை அருகே நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இது ரிக்டர் அளவுகோலில் 5 எனப் பதிவானதாக அமெரிக்க புவியியல் ஆய்வுமையம் தெரிவித்துள்ளது. 2010ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் திறக்கப்பட்ட இந்த அணுவுலை, மத்திய கிழக்கு பிராந்தியத்தில் செயல்பட்டுவரும் முதல் பொதுத்துறைசார்ந்த அணவுலையாகும்.

# நடப்பு நிகழ்வுகள்

**1.அண்மையில் சீனா தனது கனமான செயற்கைக்கோளான ஷிஜியன்–20ஐ, எந்த ஏவுகணைகொண்டு ஏவியது?**

A) Long March 2E

B) Long March 4C

C) Long March 3B

**D) Long March 5** ☑



❖ சீனாவின் மிகப்பெரிய ஏவுகலமான லாங் மார்ச் 5ஐக் கொண்டு, சீனா, அண்மையில் மிகப்பெரிய மற்றும் அதிநவீன தகவல் தொடர்பு செயற்கைக்கோளான ஷிஜியன்–20ஐ ஏவியது. இச்சக்திவாய்ந்த ஏவுகணையால் அதிகபட்சமாக 25 டன் எடையை தாழ்புவிசுற்றுப்பாதைக்கும், 14 டன் எடையை புவி ஒத்திசைவு (geosynchronous) சுற்றுப்பாதைக்கும் கொண்டுசெல்லமுடியும்.


**2.வெப்பமண்டலப் புயலான சாராய், அண்மையில், எந்தத் தீவுக்கூட்டத்தைத் தாக்கியது?**

A) இந்தோனேஷியா

B) சாலமன் தீவுகள்

**C) பிஜி** ☑

D) நியூ கினியா




❖ வெப்பமண்டலப் புயலான சாராய், அண்மையில், தென் பசிபிக்கிலுள்ள பிஜி என்ற நாட்டைத் தாக்கியது. இது முந்நூற்றுக்கும் மேற்பட்ட தீவுகளைக்கொண்ட ஒரு தீவுக்கூடமாகும். தற்போதைய கணிப்பின்படி, பிஜியின் பிரதான தீவான விடி லெவுவை ஒட்டி, இப்புயல் செல்லும் எனக்கணிக்கப்பட்டுள்ளது, பின்னர் வெப்பமண்டலப் புயல் எச்சரிக்கை மையத்தால் எச்சரிக்கை விடுக்கப்பட்ட டோங்காவை நோக்கி அப் புயல் செல்லக்கூடும்.

**3.அண்மையில், ஐக்கிய நாடுகளின் பொது அவையால் அங்கீகரிக்கப்பட்ட, இணையக்குற்றங்களை எதிர்த்துப் போராடுவதற்கான பன்னாட்டு ஒப்பந்தத்தின் வரைவை உருவாக்கிய நாடு எது?**

A) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

**B) ரஷ்யா** ☑

C) பிரான்ஸ்

D) சீனா



❖ இணையக்குற்றங்களை எதிர்த்துப் போராடுவதற்காக ஒரு புதிய பன்னாட்டளவிலான ஒப்பந்தத்தை உருவாக்கும் செயல்முறையைத் தொடங்க அனுமதிக்கும் தீர்மானத்திற்கு ஐக்கிய நாடுகள் அவையின் பொது அவை அண்மையில் ஒப்புதல் அளித்தது. ரஷ்யாவால் தயாரிக்கப்பட்ட இந்தத் தீர்மானம், உலகின் அனைத்து பிராந்தியங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் நிபுணர் குழுவை நிறுவ அனுமதிக்கிறது.

- ❖ குற்றவியல் நோக்கங்களுக்காக தகவல் & தகவல்தொடர்பு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதை எதிர்த்துப் போராடுவதற்கான ஒரு விரிவான சர்வதேச தீர்மானத்தை இது வழங்கும்.

**4.ஆசிய உட்கட்டமைப்பு மற்றும் முதலீட்டு வங்கி, அண்மையில், இந்தியாவில், நீர்ப்பாசனம் மற்றும் சூரிய ஆற்றல் திட்டங்களுக்கான கடனை அறிவித்தது. இதன் தலைமையகம் பின்வரும் எந்த நாட்டில் அமைந்துள்ளது?**

A) தென் கொரியா

B) சிங்கப்பூர்

C) ஜப்பான்

**D) சீனா ☑**

- ❖ ஆசிய உட்கட்டமைப்பு மற்றும் முதலீட்டு வங்கி என்பது ஒரு பலதரப்பு மேம்பாட்டு வங்கியாகும்; இதன் தலைமையகம் சீனாவின் பெய்ஜிங்கில் அமைந்துள்ளது. இந்தியாவில் செயல்படுத்தப்படும் சூரிய ஆற்றல் மற்றும் நீர்ப்பாசன திட்டங்களுக்காக மொத்தம் $210 மில்லியன் டாலர் அளவுக்கு கடனுதவி வழங்க அவ்வங்கி ஒப்புதல் அளித்தது. 100 உறுப்பினர்களில், இந்தியா, அதன் இரண்டாவது பெரிய பங்குதாரராகவும் மிகப்பெரிய கடன் பெறுநராகவும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

**5.மின்–வாகனக்கொள்கை, 2019க்கு சமீபத்தில் ஒப்புதல் அளித்த மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?**

**A) தில்லி ☑**



B) பஞ்சாப்


C) புதுச்சேரி

D) சிக்கிம்

- ❖ தேசிய தலைநகரத்தில் காற்று மாசுபாட்டை எதிர்கொள்ளும் ஒரு முயற்சியாக, தில்லி அமைச்சரவை, சமீபத்தில், மின்–வாகனக்கொள்கை, 2019க்கு ஒப்புதல் அளித்தது. இந்தக்கொள்கையின்படி, 2024ஆம் ஆண்டுக்குள் 25% புதிய வாகனங்களை மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களாக விற்பனை செய்ய அரசாங்கம் எண்ணுகிறது. இக்கொள்கையின்மூலம், பொது மின்னேற்ற வசதி ஏற்படுத்தப்படும் மற்றும் மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களை வாங்குபவர்களுக்கு அரசாங்கம் சலுகைகளை வழங்கும்.

**6.அண்மையில் காலமான டா சென், பின்வரும் அவரது எந்தப்படைப்புகளுக்காக நன்கு அறியப்படுகிறார்?**

**A) Colours of the Mountain ☑**




B) Dream of the Red Chamber

C) To Live

D) Art of War

- ❖ அண்மையில் காலமான டா சென், "Colours of the Mountain" என்ற அவரது படைப்பின்மூலம் மிகப் பிரபலமானவர். இந்நூலில், மாவோ சேதுங்கால் தொடங்கப்பட்ட சீனாவின் கலாசாரப் புரட்சியின்போது

அவரும் அவரது குடும்பத்தினரும் அனுபவித்த இன்னல்களை அவர் எடுத்துரைக்கிறார். இந்நூல் ஏழு மொழிகளில் வெளியிடப்பட்டது.

**7.அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட ஹிம் தர்ஷன் விரைவு தொடர்வண்டிச் சேவையானது, பின்வரும் எந்த இரு இடங்களை இணைக்கிறது?**

A) சிக்கிம் – காங்டாக்

**B) கல்கா – சிம்லா ☑**

C) சண்டிகர் – சிம்லா

D) ஸ்ரீநகர் – சிம்லா



❖ இந்தியாவின் சுற்றுலாவை மேம்படுத்தும் விதமாக முதன்முதலாக கண்ணாடி ரயில் விடப்பட்டுள்ளது. ஹிமாச்சலப்பிரதேச மாநிலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 7 பெட்டிகளைக்கொண்ட "ஹிம் தர்ஷன்" என்ற இந்த விரைவு தொடர்வண்டி, பக்கவாட்டில் கண்ணாடிகளுடன் மேற்கூரையிலும் கண்ணாடி பொருத்தப்பட்டுள்ளது.

❖ இதன்மூலம் சுற்றுலாப்பயணிகள் அனைத்துத் திசைகளிலும் இயற்கையை ரசித்தவாறே பயணிக்க முடியும். கல்கா முதல் சிம்லா வரையிலான 96 கி.மீ நீளமுள்ள இந்தப்பாதையை UNESCO அமைப்பு உலக பாரம்பரியத் தலமாக அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**8.எந்த மாநிலத்தைச்சேர்ந்த நகர்ப்புற அமைப்புகள் தங்களை திறந்தவெளி மலங்கழித்தலற்ற அமைப்பாக இன்னும் அறிவித்துக்கொள்ளவில்லை?**

A) பீகார்

B) உத்தரபிரதேசம்

C) ஜார்கண்ட்

**D) மேற்கு வங்கம் ☑**

❖ தூய்மை இந்தியா இயக்கம் – திறந்தவெளி மலங்கழித்தலற்ற நகர்ப்புறம் என்னும் தேசிய இலக்கை அடைந்துவிட்டதாக மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் அறிவித்துள்ளது. 35 மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களில் உள்ள நகர்ப்புறங்கள், திறந்தவெளி மலங்கழித்தலற்ற நகர்ப்புறங்களாக ஆகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், மேற்கு வங்க மாநிலத்தில் உள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் தங்களை திறந்தவெளி மலங்கழித்தலற்ற நகர்ப்புறங்கள் என்று இன்னும் அறிவித்துக்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**9.மத்தியபிரதேசத்தில் நடைபெறும் மாண்டூ திருவிழாவை ஏற்பாடு செய்யும் அமைப்பு எது?**

**A) மத்தியபிரதேச சுற்றுலா வாரியம் ☑**

B) மத்தியபிரதேச பழங்குடியினர் விவகாரங்கள் துறை

C) UNESCO

D) மத்தியபிரதேச கலாசாரத்துறை

❖ மாண்டு திருவிழாவின் முதல்பதிப்பு, மத்தியபிரதேச மாநிலத்தில் உள்ள மாண்டுவில் தொடங்கியது. இதை, மத்தியபிரதேச சுற்றுலா வாரியம் ஏற்பாடு செய்துள்ளது. இந்தத் திருவிழா, "Khojne Me Kho Jao – தேடலில் தொலைந்துபோங்கள்" என்ற பொருளின்கீழ் அமைந்துள்ளது. நகர கலாசாரத்தின் நவீன வாழ்க்கை முறையுடன் கலந்த வரலாற்று பாரம்பரியத்தை கொண்டாடுவதும் இதில் அடங்கும்.

**10. "சிறந்த செயல்திறன்மிக்க வங்கி"க்கான விருதை சமீபத்தில் பெற்ற வங்கி எது?**

A) பாரத ஸ்டேட் வங்கி

B) ஐசிஐசிஐ வங்கி

C) ஜம்மு – காஷ்மீர் வங்கி

**D) ஆந்திரா வங்கி ☑**

❖ மத்திய வேளாண்மை மற்றும் உழவர்நலன், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் ஆகிய இரண்டு அமைச்சகங்களும் இணைந்து, அண்மையில், 2018-19 நிதியாண்டுக்கான "Best Performing Bank Award – சிறந்த செயல்திறன்மிக்க வங்கி"க்கான விருதினை ஆந்திரா வங்கிக்கு வழங்கின.

❖ ஆந்திரா, தெலுங்கானா, ஒடிசா மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களில் 14 கிராம சுய வேலைவாய்ப்புப் பயிற்சி நிறுவனங்களை அமைத்ததற்காக இந்த விருது வழங்கப்பட்டது. இந்த நிறுவனங்கள் ஆந்திர வங்கி ஊரக வளர்ச்சி அறக்கட்டளையின்கீழ் செயல்பட்டு வருகின்றன.

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

❖ சென்னை தரமணியில் உள்ள மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சி மைய வளாகத்தில் புதிதாக அமைக்கப்படவுள்ள அடுத்த தலைமுறை ஆற்றல் சேமிப்புத் தீர்வுக்கான புதிய தொழில்நுட்ப மையத்திற்கு, மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் Dr. ஹர்ஷ்வர்தன் அடிக்கல் நாட்டினார்.

## நடப்பு நிகழ்வுகள்

**1.விரைவான சதுரங்கத்தின் பின்வரும் எந்த வகையில், சமீபத்தில், கொனேரு ஹம்பி உலக பெண்கள் விரைவு செஸ் சாம்பியன்ஷிப்பை வென்றார்?**



A) பிளிட்ஸ் செஸ்

**B) ஆர்மகெடன் செஸ் ☑**

C) புல்லட் செஸ்

D) அல்ட்ரா புல்லட் செஸ்

❖ ஆர்மகெடன் சதுரங்கப் போட்டியில், கறுப்பைவிட வெள்ளைக்கு அதிகநேரம் கொடுக்கப்படுகிறது. இது தீர்க்கமான முடிவுகளைத் தருவதற்கான ஒரு வழியாகும்; மேலும், டை–பிரேக்கராக செயல்படுகிறது. விஸ்வநாதன் ஆனந்திற்குப்பிறகு 'Rapid Gold' செஸ் போட்டியில் தங்கம்வென்ற 2ஆவது இந்திய செஸ் போட்டியாளராக கொனேரு ஹம்பி உள்ளார்.

**2.கலை தரவுத்தளத்தின் திருடப்பட்ட படைப்புகளை பராமரிக்கும் அமைப்பு எது?**

A) UNESCO

B) உலக வர்த்தக அமைப்பு

C) இந்திய தொல்லியல் ஆய்வகம்

**D) பன்னாட்டுக் காவலகம் ☑**

❖ கலை தரவுத்தளத்தின் திருடப்பட்ட படைப்புகளுக்கான (Stolen Works of Art) தரவுத்தளத்தை பன்னாட்டுக் காவலகம் (InterPol) பராமரித்து வருகிறது. இந்தியாவில், பன்னாட்டுக் காவலகத்துக்கான மைய முகமையாக இருந்துவரும் மத்திய புலனாய்வுப் பிரிவு (CBI), சமீபத்தில், கலை திருட்டுகளுக்கு, இந்தியா ஒரு முக்கிய இலக்காக மாறுவது குறித்து இந்திய தொல்லியல் ஆய்வகம் (ASI) போன்ற முகமைகளை எச்சரித்துள்ளது.

**3.அண்மையில் வெளியிடப்பட்ட, இந்திய மாநில வன அறிக்கை–2019இல், அதிக வனப்பகுதியை கொண்டுள்ள மாநிலம் எது?**




A) ஆந்திரபிரதேசம்

**B) மத்தியபிரதேசம் ☑**

C) நாகாலாந்து

D) மேகாலயா

❖ அண்மையில் வெளியிடப்பட்ட, இந்திய மாநில வன அறிக்கை–2019இல், மத்தியபிரதேச மாநிலம் அதிக வனப்பகுதியை கொண்டுள்ளது. அருணாச்சலபிரதேசம், சத்தீஸ்கர், ஒடிசா மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்கள் பிற அதிக வனப்பகுதிகள் உள்ள மாநிலங்கள் என குறிப்பிடப்பட்டுள்ளன. சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின்கீழ் உள்ள இந்திய வன கணக்கெடுப்பு நிறுவனத்தால் ஈராண்டுகளுக்கு ஒருமுறை மாநில வன அறிக்கை வெளியிடப்படுகிறது.

**4.வடக்கில் மூடுபனி நிலைமைகள் தொடர்பாக அண்மைச்செய்திகளில் இடம்பெற்ற CAT IIIB அமைப்பு எனபது என்ன?**

**A) கருவிக்குறி தரையிறங்கும் அமைப்பு ☑**



B) வானிலை கண்காணிப்பு அமைப்பு

C) மூடுபனி தீவிரத்தை வகைப்படுத்துவதற்கான அமைப்பு

D) சாலை பாதுகாப்பு அமைப்பு

- ❖ CAT IIIB அமைப்பு என்பது ஒரு கருவிக்குறி தரையிறங்கும் அமைப்பாகும் (Instrument Landing System). கட்புலனாகுதன்மை குறைவாக இருக்கும் காலங்களில் வானூர்திகளை பாதுகாப்பாக தரையிறக்குவ–தற்கு இவ்வமைப்பு பயன்படுத்தப்படுகிறது.
- ❖ கட்புலனாகுதன்மை குறைந்தது ஐம்பது அடியாக இருக்கும்போது இது துல்லியமான தரையிறக்கத்தை மேற்கொள்ள அனுமதிக்கிறது. மூடுபனி காரணமாக தில்லி வானூர்தி நிலையத்தில், CAT IIIB வசதி பொருத்தப்பட்டுள்ள வானூர்திகள் மட்டுமே தரையிறங்க அனுமதிக்கப்படுகின்றன.

**5.அண்மைச்செய்திகளில் இடம்பெற்ற 'ஆபரேஷன் இன்ஹெரென்ட் ரிசால்வ்', எந்த நாட்டின் இராணுவப் படைகளால் நடத்தப்படுகிறது?**

A) பிரான்ஸ்

**B) ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑**

C) கனடா

D) ரஷ்யா

- ❖ 'ஆபரேஷன் இன்ஹெரென்ட் ரிசால்வ்' என்பது அமெரிக்காவின் இராணுவ நடவடிக்கையாகும். இது, ஈராக், சிரியா மற்றும் முன்னாள் லிபியாவில் ISIL நடவடிக்கைகளுக்கு எதிரான இராணுவ தலையீடு ஆகும். அண்மையில், சிரியா மற்றும் ஈராக்கில் ஈரான் ஆதரவுடைய தீவிரவாத அமைப்பான கடைட் ஹெஸ்பொல்லாவுக்கு எதிராக அமெரிக்கா வான்வழித் தாக்குதல்களை மேற்கொண்டது.

**6.ஏட்ரிய குறுநடுக்கத் தொழில்நுட்பத்தை பயன்படுத்தியதற்காக அண்மையில், ஆப்பிள் நிறுவனத்தின் மீது வழக்குத்தொடரப்பட்டது. எந்நிலையை கண்டறிவதற்காக அத்தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது?**

A) அமைப்பு அதிக வெப்பமாதல்



B) வெளிநாட்டு அமைப்பின் தாக்குதல்

**C) ஒழுங்கற்ற இதயத்துடிப்பு ☑**

D) மின்பகுளி ஏற்றத்தாழ்வு

- ❖ ஒழுங்கற்ற இதயத்துடிப்பைக் கண்டறிவதற்காக ஏட்ரிய குறுநடுக்கத் (Atrial Fibrillation) தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது. ஆப்பிள் கைக்கடிகார தயாரிப்பு நிறுவனம் இத்தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கைக்கடிகாரத்தை அணிந்தவரின் இதய செயல்பாட்டைக் கண்காணிக்கிறது.

❖ நியூயார்க் பல்கலைக்கழக மருத்துவர் ஒருவர், அண்மையில், ஆப்பிள் நிறுவனம் காப்புரிமை பெற்ற தொழில்நுட்பத்தை திருடியதாக வழக்குத்தொடர்ந்தார்.


**7.அண்மையில் அறிவியலாளர்களால் அடையாளங்காணப்பட்ட Importin-11 என்ற புரதம், எந்த வகை புற்றுநோயை ஏற்படுத்துகிறது?**

A) இரத்த புற்றுநோய்

B) நுரையீரல் புற்றுநோய்

C) புரோஸ்டேட் புற்றுநோய்

**D) பெருங்குடல் புற்றுநோய் ☑**




❖ பீட்டா-கேடெனின் புரதத்தை செல்களின் கருவுக்கு மாற்றுவதற்கு காரணமான 'Importin-11' என்ற புரதத்தை அறிவியலாளர்கள் அண்மையில் அடையாளம் கண்டறிந்தனர். இந்த, பீட்டா-கேடெனின், குடல் புற்றுநோய் செல்களின் பெருக்கத்தை தூண்டுகிறது. Importin-11 புரதத்திற்கான குறியீட்டுக்கு, IPO11 மரபணு பொறுப்பாக உள்ளது என்பதை அவர்கள் கண்டறிந்துள்ளனர்.

**8.மிகநீண்டகாலம் விண்வெளிப்பயணம் மேற்கொண்டதற்கான சாதனையைப் படைத்துள்ள பெண் யார்?**

A) பெக்கி விட்சன் (Peggy Whitson)

**B) கிறிஸ்டினா கோச் (Christina Koch) ☑**

C) ஜெஸ்ஸிகா மீர் (Jessica Meir)

D) சாலி ரைடு (Sally Ride)



❖ அமெரிக்க விண்வெளி வீராங்கனை கிறிஸ்டினா கோச், பன்னாட்டு விண்வெளி நிலையத்தில் (ISS), ஒரு பெண்ணாக 288 நாட்களைக் கடந்தபோது, விண்வெளியில் தொடர்ந்து அதிக நாட்களைக் கழித்த பெண் என்ற சாதனையைப் படைத்துள்ளார். பெண்களுக்கான முந்தைய சாதனையை மற்றொரு அமெரிக்கரான பெக்கி விட்சன் 2016-2017ஆம் ஆண்டில் படைத்திருந்தார்.

❖ வரும் 2020ஆம் ஆண்டு பிப்ரவரி 6ஆம் தேதியன்று கிறிஸ்டினா பூமிக்குத் திரும்புகிறார். அப்போது அவர் 328 நாட்கள் விண்வெளியில் வசித்திருப்பார். நீண்ட விண்வெளிப்பயணங்களால் ஏற்படும் விளைவுகள் குறித்து ஆய்ந்தறிவதற்காக இந்தப் பயணம் பயன்படும்.

**9.அண்மையில் வழங்கப்பட்ட தாதாசாகேப் பால்கே விருது, எந்தத் துறையில் வழங்கப்படும் நாட்டின் மிக உயர்ந்த விருதாகும்?**

A) நாடகக்கலை

B) பாரம்பரிய நடனங்கள்

**C) திரைத்துறை ☑**

D) பாரம்பரிய இசை



- ❖ தாதாசாகெப் பால்கே விருது, இந்தியத் திரைப்படத்துறையில் வாழ்நாள் சாதனை புரிந்தோருக்காக இந்திய அரசால் ஆண்டுதோறும் வழங்கப்படும் விருதாகும். இவ்விருது, இந்திய திரைப்படத்துறையின் தந்தை எனக்கருதப்படும் தாதாசாகெப் பால்கே அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டான 1969ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. நடப்பாண்டுக்கான (2019) விருது, நடிகர் அமிதாப்பச்சனுக்கு வழங்கப்பட்டது.

**10.பதல்கடி இயக்கத்தின்போது பதிவுசெய்யப்பட்ட அனைத்து வழக்குகளும் அண்மையில் திரும்பப் பெறப்பட்டன. இந்த இயக்கம் தொடர்புடைய மாநிலம் எது?**

A) சத்தீஸ்கர்

**B) ஜார்க்கண்ட் ☑**

C) ஒடிசா

D) மேற்கு வங்கம்

- ❖ பதல்கடி இயக்கத்தின்போது பதிவுசெய்யப்பட்ட அனைத்து வழக்குகளையும் திரும்பப்பெற ஜார்க்கண்ட் மாநில அரசு அண்மையில் முடிவுசெய்தது. பதல்கடி என்ற சொல்லுக்கு 'நடைபாதை' என்று பொருள். அவ்வியக்கத்தின் உறுப்பினர்கள் மாநில மற்றும் மத்திய அரசாங்கங்களின் அதிகாரத்தை அங்கீகரிக்க மறுத்ததோடு, கிராமப்பஞ்சாயத்தை மட்டுமே அங்கீகரித்தனர்.

---